

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 52 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 14 – திங்கள்கிழமை 30 செப்டம்பர் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 52 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 14 - Monday 30 September 2024 - Madurai 12 Pages ₹ 5.00








தமிழ்நாடு துணை முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (29.9.2024) தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை!

# துணை முதல்வரானார் உதயநிதி ஸ்டாலின்!

## வி.செந்தில் பாலாஜி - ஆர்.ராஜேந்திரன் - கோவி. செழியன் - சா.மு.நாசர் - 4 புதிய அமைச்சர்களுக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, செப். 30-**

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டார். அவருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

**புதிய அமைச்சர்களாக பதவியேற்ற ஆர்.ராஜேந்திரன், வி.செந்தில் பாலாஜி, கோவி. செழியன், சா.மு.நாசர் ஆகியோருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். புதிய அமைச்சர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.**

துணை முதலமைச்சர் பொறுப்பை உதயநிதி ஸ்டாலின் கவனிப்பார் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் மாலை அறிவித்தார்.

அமைச்சர் உதயநிதிக்கு ஏற்கெனவே இருக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையுடன் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி துறையும் கூடுதலாக வழங்கப்படுகிறது.

வி.செந்தில் பாலாஜி, கோவி. செழியன், ஆர்.ராஜேந்திரன், ஆவடி சா.மு.நாசர் ஆகியோரும் புதிய அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மனோ தங்கராஜ், செஞ்சி மஸ்தான், கா.ராமச்சந்திரன் ஆகியோர் அமைச்சரவையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

### அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றம்!

அமைச்சர் க.பொன்முடி வனத்துறையை கவனிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லத்திற்கு நேரில் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதனுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் கயல்விழிக்கு மனிதவள மேம்பாட்டுத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சர் மதிவேந்தனுக்கு ஆதிதிராவிடர் நலத்துறையும், ராஜ கண்ணப்பனுக்கு பால்வளத்துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு நிதி, காலநிலை மாற்றத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய அமைச்சர்கள் நேற்று மாலை 3.30 மணியளவில் பதவியேற்றனர்.

நேற்று மாலை ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு விழா நடைபெற்றது. புதிய அமைச்சர்களாக வி.செந்தில் பாலாஜி, கோவி. செழியன், ஆர்.ராஜேந்திரன், ஆவடி சா.மு.நாசர் ஆகியோருக்கு ஆளுநர் பதவி நியமனமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

இவ்விழாவில் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளிட்ட முதல்வர் அவர்களின் குடும்ப த்தினர், பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் புதிய அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொண்ட செந்தில் பாலாஜி, கோவி. செழியன், இரா.ராஜேந்திரன், ஆவடி சா.மு.நாசர் ஆகியோரை வாழ்த்தினர்.

### பெரியார் - அண்ணா - கலைஞர் நினைவிடங்களில் மரியாதை!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பரிந்துரையின்படி தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து பெரியார் திடலுக்குச் சென்று அங்கு பெரியார் நினைவிடத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துப் பெற்றார்.

இதையடுத்து சென்னை கோபாலபுரம் இல்லத்திற்கு நேரில் சென்று அங்கு முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

கோபாலபுரம் இல்லத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, இயக்குனர் அமிர்தம், குணாநிதி அமிர்தம் உள்ளிட்டோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சென்னை சி.ஐ.டி. காலனி இல்லத்திற்கு நேரில் சென்று அங்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதியிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து பெற்றார்.

இதற்கிடையே, சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள பேராசிரியர் இல்லத்துக்கு சென்ற துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அங்கு பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது, பேராசிரியரின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### அமைச்சர்கள் நேரில் வாழ்த்து!

இந்நிலையில், சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அமைச்சர்கள் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து புத்தகம், பூங்கொத்து மற்றும் சால்வை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

### தமிழ்நாடு முழுவதும் இனிப்பு வழங்கினர்!

தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டிருப்பதை அடுத்து தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடி வருகின்றனர். துணை முதலமைச்சராகியுள்ள உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துக்களும் குவிந்து வருகிறது.

இதேபோன்று தமிழகம் முழுவதும் கழகத்தினர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் பட்டாசு வெடித்தும் மகிழ்ந்தனர்.

---

## விமர்சனங்களுக்கான பதிலை

# என்னுடைய பணிகள் மூலம் சிறப்பாக செயல்படுத்திக் காட்டுவேன்!



## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, செப். 30-**

**“வருகின்ற விமர்சனங்களை உள்வாங் கிக் கொண்டு மேலும் சிறப்பாகச் செயல்படு வேன்” என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் உறுதிபட கூறியுள்ளார்.**

துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்திய பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

நேற்று (28.9.2024) இரவு முதலமைச்சர் எனக்கு கூடுதலாக ஒரு பொறுப்பு கொடுத்து இருக்கிறார்கள். துணை முதலமைச்சர் என்று அறிவித்து இருக்கிறார்கள். இன்று (29.9.2024) 4 புதிய அமைச்சர்கள் பொறுப்பேற்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள். முதலமைச்சருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

துணை முதல்வர் என்பது பதவி அல்ல, பொறுப்பு என்பதை உணர்ந்து செயல்படுவேன். என் மீது வைக்கப்படும் விமர்சனங்களுக்கு எனது செயல்பாடுகள் மூலம் பதில் அளிப்பேன். மக்களுக்காக உழைக்க இன்னும் அதிக வாய்ப்பு கொடுத்து இருக்கிறார்கள். முதல் அமைச்சர், மூத்த அமைச்சர்களின் வழிகாட்டுதல் படி செயல்படுவேன். வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க. இளைஞர் அணி செயலாளராக நியமிக்கப்பட்ட போதும் விமர்சனங்கள் வந்தது, என்னுடைய பணிகள் மூலமாக மட்டும்தான் அதை நியாயப்படுத்த முடியும்.

எம்.எல்.ஏ.,, அமைச்சர் பொறுப்பு கொடுத்த போதும் விமர்சனங்கள் வந்தது.

என் மீது வைக்கப்படும் விமர்சனங்களுக்கு நன்றி. அனைத்து விமர்சனங்களையும் உள்வாங்கிக்கொண்டு அதன்படி எனது பணிகளை அமைத்துக் கொள்கிறேன். ஏற்கனவே அமைச்சராக 2 ஆண்டுகளாக எனது பணியை செய்து கொண்டிருக்கிறேன்.

இது கூடுதல் பணி தான். தலைவரின் வழிகாட்டுதலின் பேரில், மூத்த அமைச்சர்களின் ஒத்துழைப்போடு இதனையும் நன்றாக செய்வேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

வருகின்ற விமர்சனங்களையும் உள்வாங்கி கொண்டு மேலும் சிறப்பாக செயல்பட முயற்சி செய்கிறேன்.

இவ்வாறு அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.